RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2246

OPEN ACCESS

# கோவூர்கிழார் பாடல்களில் ஆளுமைப் பண்புகள்

**ப. இளங்கோவன் [அ, *], ஜெ. சந்திரகலா [அ]**

[அ] தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி- 620024, தமிழ்நாடு, இந்தியா.

# Personality Traits in Kovurkizhar Songs

**P. Elangovan [a,*], J. Chandrakala [a]**

[a] Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli-620024, Tamil Nadu, India

* Corresponding Author: elangov168@gmail.com

Received: 17-04-2022
Revised: 13-07-2022
Accepted: 03-08-2022
Published: 26-08-2022

Check for updates

**ABSTRACT**

Kovoorkizhar was one of the most scholarly poets of the Sangam age. He is one of the 15 Kizhar poets in the Purananooru. Supported by the Chola dynasty, he was of the view that there should be love, righteousness, and peace in politics. It is to be seen from his Purananooru songs in this thesis that the ruling kings, however, kept their anger aside and worked diligently to change their wrong policies and make them better. There are 15 songs in Purananooru sung by him. Of these, the four songs from 44 to 47 in the Purananooru can identify his personality traits. The songs were performed in person by the four Chola kings (Nalankilli, Nedunkilli, Kulamuruthathu, Thunjiya Killivalavan, and Kurapalli Thunjiya Killivalavan) speak volumes about their power and virtues. He has also highlighted the personality traits of the kings featured in those songs. It is to be noted that Kovoor Kizhar sang two of the six songs (68 and 70) in Purananooru about the field of Panatruppadai. It is explained in this review that the poets featured in these songs were selfless and respected the welfare of others. Along with these, a song (308) is featured in the Mullaithurai of Moodin, sung by Kovoorkizhar. This thesis describes the lives of the Panars and the great power of the King of Seerur.

**Keywords:** Sangam Literature, Puranaanooru, Thirukkural, Kovurkizhar, Chola Kings, Personality, Personality Traits, Morality, Valor, Charity, Advice, Consolation, Mudhinmullai

## முன்னுரை

தமிழரின் வாழ்வியலை எடுத்துரைக்கும் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்வது சங்க இலக்கியம் ஆகும். சங்க இலக்கியங்கள் 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டுள்ளன. இதனை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என இரண்டாகப் பகுத்து பதினெண் மேற்கணக்கு நூல்கள் எனவும் அழைப்பர். இவற்றுள் கோவூர்கிழார் பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு ஆகிய மூன்று நூல்களில் மட்டும் இடம்பெற்றுள்ளன. இம்மூன்று நூல்களுள் புறநானூற்றில் பதினைந்து பாடல்களைப் (31, 32, 33, 41, 44, 45, 46, 47, 68, 70, 308, 373, 382, 386, 400) பாடியுள்ளார். இப்பாடல்களில் காணப்படும் ஆளுமைப் பண்புகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆளுமைப் பண்பு

ஆளுமை எனத் தமிழில் வழங்கும் சொல்லின் வேர் இலத்தீன் மொழியிலுள்ள 'பர்ஸொனா' என்ற சொல்லாகும். ஆங்கிலத்தில் ஆளுமையைக் குறிக்கும் 'Personality' என்னும் சொல்

இச்சொல்லிலிருந்து பிறந்ததாகும். 'பர்ஸானா' என்ற இலத்தின் சொல், நாடகமேடையில் நடிப்பவர்கள் அணிந்திருந்த முகமூடியைக் குறித்தது. அப்படியானால் 'ஒருவனது பண்புகளைக் குறிக்கும் வெளித்தோற்றம்' என்பதே ஆரம்ப காலத்தில் ஆளுமை என்பதன் பொருளாக இருந்தது (தற்போது புறத்தோற்றத்தை மட்டுமே எனத் தவறாகக் கருதுவோரும் உண்டு). ஆனால் புறத்தோற்றம் மட்டுமே ஆளுமை ஆகாது. ஒரு மனிதனின் அக, புற நடத்தைக் கூறுகள் அனைத்தும் ஆளுமையினுள் அடங்கும் (Sugirtha Basmath, 2017).

'தனி ஒருவனது முத்திரைப் பண்பே ஆளுமை ஆகும்' (Rajiv K. Mishra, 2004).

ஆளுமையானது ஒருவனது பண்புகளின் தனித்தன்மை வாய்ந்த அமைப்பு என்று கில்போர்ட் குறிப்பிடுகின்றார் (Sugirtha Basmath, 2017). மேற்குறிப்பிட்ட கருத்துக்களிலிருந்து ஆளுமை என்பது ஒருவனை மற்றவரிடமிருந்து பிரித்து வேறுபடுத்திக் காட்டும் பண்புகளின் தொகுதி எனலாம். அவ்வகையில் கோவூர்கிழார் பாடல்களில் காணப்படும் ஆளுமைப் பண்புகளை இங்கே காண்போம்.

## அறப்பண்பு

மனத்தின்கண் குற்றமில்லாமல் இருத்தலையே அறம் என்கிறார் வள்ளுவர். இதனை, 'மனத்துக்கண் மாசிலனாதல்' (Kural.34) என்ற அடியில் குறிப்பிட்டுள்ளார் (Kaliyaperumal, 2014).

மனத்தின்கண் குற்றம் இல்லாது இருத்தல் என்பது, மனதில் படியும் மாசுகளான பொறாமை, பேராசை, வெகுளி, கடுஞ்சொல் இந்நான்கையும் ஒழித்து நடப்பதுவேயாகும். அதுவே 'அறம்' எனப்படும். இதனை,

"அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொன் னான்கு

மிழுக்கா வியன்ற தறம்"

என்னும் இக்குறளில் எடுத்துரைத்துள்ளார் (Kaliyaperumal, 2014). இத்தகைய அறத்தின் சிறப்பினை,

"சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்

அறத்து வழிப்படூஉத் தோற்றம் போல

இருகுடை பின்பட வோங்கிய வொருகுடை"

இவ்வடிகளில், அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள்களுள் அறத்தைப் பின்தொடர்ந்தே பொருளும், இன்பமும் வரும். அதுபோல அறத்தின் வழியில் ஆட்சி செய்யும் சோழன் நலங்கிள்ளியைப் பின்தொடர்ந்தே சேர, பாண்டியனின் ஆட்சி அமையும் என்பதைக் கோவூர்க்கிழார் குறிப்பிட்டுள்ளார் (Avvai DuraisamiPillai, 2009). இதிலிருந்து சேர, சோழ, பாண்டியர்கள் அறப்பண்புடையவர்களாகத் திகழ்ந்ததை அறிந்துகொள்ள முடிகின்றது.

## வீரப்பண்பு

சங்ககாலம் 'வீரயுகம்' என்று போற்றப்படுகிறது. சங்ககாலத்தில் வீரம் மிக உயர்ந்த பண்பாகக் கருதப்பட்டது. இவ்வீரப்பண்பே நாட்டிற்கும், சமூகத்திற்கும் தேவையானதாகக் கருதப்பட்டது. ஆகையால் புலவர்களும் இவ்வீரப்பண்பிற்கு முதன்மைக் கொடுத்துப் பாடியுள்ளனர். கோவூர்கிழார்,

'கல்லெண்

விழவுடை யாங்கண் வேற்றுப்புலத் திறுத்துக்

குணக்கடல் பின்ன தாகக் குடகடல்

வெண்டலைப் புணரிநின் மான்குளம்

வலமுறை வருதலு முண்டென் றலமந்து

நெஞ்சுநடுங் கவலம் பாயத்

துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே"

என்னும் பாடலடிகளின் வாயிலாக சோழன் நலங்கிள்ளி சேர, பாண்டிய நாட்டை வென்றதன் விளைவாக கொண்டாடிய வெற்றி விழாவில் கலந்துகொண்டு, கிழக்கு கடற்கரையிலிருந்து மேற்கு கடற்கரை வரைக்கும் தன்னுடைய குதிரையின் மேலேறி வலம் வருவான் என்று எண்ணி வட மாநிலத்து அரசர்கள் அஞ்சினர். அதனை நினைத்து அச்சம் கொர்ணடவர்களாய் உறக்கமின்றி தவித்தனர். மேற்கண்ட செய்தி வாயிலாக சோழன் நலங்கிள்ளியின் மறப்பண்பும், அவன் வெற்றி விழாவைக் கொண்டாடும்போது பகைவர்களுக்கு ஏற்படும் அச்சமும் வெளிப்படுவதைக் காணலாம் (Avvai DuraisamiPillai, 2009).

சோழன் நலங்கிள்ளி ஏழு மதில்களை உடைய பாண்டியனின் கோட்டையை அழித்து, அக்கோட்டையின் வாயிலில் உள்ள கதவில் தன்னுடைய 'புலிச்சின்னத்தைப் பொறித்தான்' என்பதை,

"தென்னம் பொருப்ப ன்னாட் டுள்ளும்

ஏழெயிற் கதவ மெறிந்துகைக் கொண்டுநின்

பேழ்வா யுழுவை பொறிக்கு மாற்றலை"

என்று கோவூர்கிழார் எடுத்தியம்புகிறார் (Avvai DuraisamiPillai, 2009). மேலும் அக்காலத்தில் கோட்டையை வென்ற அரசன் அக்கோட்டையின் கதவில் தன் இலச்சினையைப் பொறித்தல் அக்காலப் போரியல் வழக்கமாக இருந்ததையும் தெளிவுப்படுத்தியுள்ளார்.

## நம்பிக்கையும் வீரமும்

சங்ககாலத்தில் போருக்குச் செல்லும் முன் நல்லது அல்லது தீய அறிகுறிகள் தென்படுகின்றனவா என்பதை அறிதல் பண்டைய மரபு. அவற்றுள், தீக்கனா அறிகுறிகள்,

- எட்டுத்திசையில் எரிமீன் எரிந்து விழுதல்.
- பெரிய பச்சை மரம் பற்றி எரிதல்.
- சூரியன் அணற்பிழம்புகளை உதிர்த்தல்.
- அச்சம் தரும் பறவைகள் ஒலியெழுப்புதல்.
- வாயிலிருந்து பற்கள் தரையில் விழுதல்.
- தலையில் எண்ணெய் தேய்த்து நீராடல்.
- ஆண் பன்றியின் மீது ஏறுதல்.
- உடலிலிருந்து ஆடை கீழே விழுதல்.
- அரச அரியணை கவிழ்தல்.

மேற்குறிப்பிட்டுள்ள தீக்கனா பற்றிய நம்பிக்கை அக்கால மக்களிடையே நிலவியதை,

"திசையிரு நான்கு முற்க முற்கவும்

பெருமரத், திலையி னெடுங்கோடு வற்றல் பற்றவும்

வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவும்

அஞ்சுவரத் தகுந புள்ளுக்குர லியம்பவும்

எயிறுநிலத்து வீழவு மெண்ணெ யாடவும்

களிறுமேல் கொள்ளவுங் காழக நீப்பவும்

வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்

கனவி னரியன காணா"

என்னும் பாடலடிகளில் விளக்கியுள்ளார் (Avvai DuraisamiPillai, 2009). மேலும் நாம் காணும் கனவு கடந்த காலம் பற்றியதாகவோ அல்லது எதிர்காலம் பற்றியதாகவோ அமையும். அவ்வகையில் இப்பாடலில் இடம்பெற்றுள்ள தீய கனவு பற்றிய நம்பிக்கை, போர் நிகழ்ந்தால் தீங்கு விளையும் என்பதை உணர்த்துகின்றது. ஆகையால் போரைத் தவிர்த்தல் நலம் என்பது புலனாகும். ஒருவேளை போருக்குச் சென்றால் மிகுந்த கவனமுடன் செயல்பட வேண்டும் என்பதையும் இக்கனவு உணர்த்துவதிலிருந்து ஆளுமையைக் கட்டமைப்பதில் இவ்வாறான நம்பிக்கையின் பங்கினை அறிந்துகொள்ளலாம்.

மேற்குறிப்பிட்டவாறு கனவு காணும்படி நனவிலேயே போரிடும் ஆற்றல் உடையவன் கிள்ளிவளவன். அவன் போர்த்தொடுக்க வருவதையறிந்த பகைவர்கள் அச்சம் கொண்டவர்களாய் மயங்கி, அதனை மனைவியர் அறியாதவாறு மறைத்துத் தன் மகனுக்கு முத்தம் கொடுப்பார்கள் என்பதிலிருந்து கிள்ளிவளவனின் வீரமும், போராற்றல் பண்பும் வெளிப்படுவதை,

"நனவிற்

செருச்செய் முன்பநின் வருதிற னோக்கி

மையல் கொண்ட வேமமி லிருக்கையர்

செருமிகு வளவநிற் சினை இயோர் நாடே"

இப்பாடலடிகளின் வாயிலாக அறிந்துகொள்ள முடியும் (Avvai DuraisamiPillai, 2009).

## கொடைப்பண்பு

சங்ககால அரசர்கள் கொடை வள்ளல்களாக வாழ்ந்திருக்கிறார்கள். தம்மைப் பாடிப்புகழும் புலவர்களுக்கும், ஏனையோருக்கும் பொன்னையும், பொருளையும், நாட்டையும் வரையாதுக் கொடுத்ததைச் சங்க இலக்கியங்கள் வழி உணரமுடிகின்றது. இக்கொடையின் இலக்கணத்தை,

"தாளாற்றித் தந்த பொரு ளெல்லாம் தக்கார்க்கு

வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்ற இக்குறளில் நாம் ஈட்டும் செல்வம் பிறருக்கு கொடுப்பதற்கே என்பதை எடுத்துரைத்துள்ளார் (Kaliyaperumal, 2014). மேலும் இக்கொடையின் சிறப்பினை, 'கொள்ளெனக் கொடுத்த லுயர்ந்தன்று' என்ற அடியில், ஒருவன் கொடு எனக் கேட்பதற்கு முன்னரே குறிப்பறிந்து இதனைக் கொள்வாயாக எனக் கொடுப்பது சிறந்த கொடைப்பண்பு என்று கழைதின் யானையார் குறிப்பிட்டுள்ளார் (Avvai DuraisamiPillai, 2009). இத்தகைய கொடைப்பண்பு மிக்கவன் சோழன் நலங்கிள்ளி. இரக்கம் மிகுந்தவன் தன்னை நாடிவருபவர் வேண்டிக்கேட்டால் வஞ்சி நகரையேத் தரும் பண்பினன். பாடிவரும் விறலியர் தலையில் சூடிக்கொள்ள பூவினைக் கேட்டால் மாடமாளிகைகளுடன் விளங்கும் மதுரை நகரையேத் தருவான். எனவே பரிசில் வேண்டுபவர்கள் நலங்கிள்ளியைப் பாட வருவீர்களாக என்று குறிப்பிடுவதிலிருந்து, கோவூர்கிழாரின் பிறர்நலம் பாராட்டும் பண்பும், சோழன் நலங்கிள்ளியின் கொடைப்பண்பும் வெளிப்படுகிறது. இதனை,

"கடும்பி னடுகல நிறையாக நெடுங்கொடிப்

பூவா வஞ்சியுந் தருகுவ னொன்றோ

வண்ண நீவிய வணங்கிறைப் பணைத்தோள்

ஒண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகென

மாட மதுரையுந் தருகுவ னெல்லாம்

பாடுகம் வம்மினோ பரிசின் மாக்கள்"

என்னும் இப்பாடலடிகள் தெளிவுப்படுத்துகின்றன (Avvai DuraisamiPillai, 2009).

## வளமும் மகிழ்ச்சியும்

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதக் கூறுகளாகத் திகழ்பவைகளுள் வளமும் மகிழ்ச்சியும் இடம்பெறும். அத்தகைய வளமும் மகிழ்ச்சியும் உடைய நாடாக தென்னம்பொருப்பு திகழ்ந்தது. தென்னம்பொருப்பு என்பது பொதியமலையினைக் குறிக்கும். அக்காலத்தில் பொதியமலையை ஆட்சிப்புரிந்தவன் பாண்டியன் ஆவான். அந்நாட்டின் மலைப்பகுதியில் வாழும் வேடன் நாயுடன் சென்று வேட்டையாடிய மான் தசையைக் கொடுத்துவிட்டு, மலையின்கீழ் பகுதியில் வாழும் உழவர்கள் விளைவித்த நெல்லைப் பெற்றுச் செல்வான். இதைப்போலவே ஆயர்குலப் பெண்கள் தயிரைக் குடத்தில் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, உழவர்கள் விளைவித்த நெல்லைப் பெற்றுச் செல்வார்கள் என்பதிலிருந்து பொதியமலை நாட்டின் வளத்தையும் அந்நாட்டு மக்களின் மகிழ்ச்சியையும்,

"கானுறை வாழ்க்கைக் கதராய் வேட்டுவன்

மான்றசை சொரிந்த வட்டியு மாய்மகள்

தயிர்கொடு வந்த தசும்பு நிறைய

ஏரின் வாழ்நர் பேரி லரிவையர்

குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்

முகந்தனர் கொடுப்ப வுகந்தனர் பெயரும்

தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்"

இப்பாடலடிகள் எடுத்தியம்புகின்றது (Avvai DuraisamiPillai, 2009). மேலும் இந்நிகழ்வு அக்காலச் சமூகத்தில் 'பண்டமாற்று முறை' வழக்கத்திலிருந்ததையும் தெளிவுப்படுத்துகின்றது.

## அறிவுரைக் கூறுதல்

உளவியல் அறிஞர் கார்ல் ரோஜர்ஸின் கருத்துப்படி, "அறிவுரை பகர்தல்" என்பது தொடர்ச்சியான நேர்முகத் தொடர்புகள் மூலம் ஒருவரது மனப்பான்மைகளையும் நடத்தையையும் மாற்றியமைத்தலாகும் (Nagarajan, 2015). சங்ககால மன்னர்கள் தங்களது வலிமையைப் பயன்படுத்தி தவறிழைக்க நேரிடும் போதும், அறநெறியிலிருந்து விலகிச்செல்ல நேரிடும் போதும் அவர்களை நெறிப்படுத்தும் சான்றோர்களாகப் புலவர்கள் திகழ்ந்திருக்கின்றனர். மேலும் மன்னர்களிடம் நேருக்கு நேர் சென்று நெறிப்படுத்தும் பண்பு அனைத்துப் புலவர்களுக்கும் வாய்க்கவில்லை. தலைமைத் தன்மையும், மனவுறுதியும் மிக்க புலவர்களுக்கே அது வாய்த்தது. அத்தன்மைமிக்க புலவராகத் திகழ்ந்தவர் கோவூர்கிழார் என்பதை அவரது பாடல்கள் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

சோழன் நலங்கிள்ளி ஆவூரை முற்றுகையிட்டிருந்த போது, கோவூர்கிழார் ஆவூர் கோட்டைக்குள்ளிருந்த நெடுங்கிள்ளிக்கு வழங்கிய அறிவுரை அவரது ஆளுமைப் பண்பிற்கு சான்றாகத் திகழ்வதை,

"இன்னா தம்ம வீங்கினி திருத்தல்

துன்னருந் துப்பின் வயமான் றோன்றல்

அறவை யாயி னினதெனத் திறத்தல்

மறவை யாயிற் போரோடு திறத்தல்

அறவையு மறவையும் மல்லை யாகத்

திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்

நீண்மதி லொருசிறை யொடுங்குதல்

நாணுத்தக வுடைத்திது காணுங்காலே"

இப்பாடலடிகள் வாயிலாக அறிந்துகொள்ள முடியும் (Avvai DuraisamiPillai, 2009). இதில், கோவூர்கிழார் பெறுதற்கரிய ஆற்றல் மிகுந்த வீரமுடைய நெடுங்கிள்ளியே, வலிமைமிக்க யானைகள் நீராடாமலும் உணவு உண்ணாமலும் பிளிறுகின்றன. குழந்தைகள் பால் இல்லாமல் அழுகின்றன. மகளிர் வெளியே சென்று பூக்களைப் பறித்துத் தலையில் சூடிக்கொள்ள இயலாமல் வெறுந்தலையை முடிகின்றனர். குடி நீரின்றி மக்கள் கூக்குரலிடுகின்றனர். இச்சூழ்நிலையில் கோட்டைக்குள் நீ பாதுகாப்பாய் இருப்பது கொடியது. ஆகையால் நீ அறத்தின் தன்மையை உணர்வாயானால் இக்கோட்டையின் கதவினைத் திறந்துவிடு. வீரமுடையவன் ஆயின் கோட்டைக் கதவினைத் திறந்து போர்செய். அவ்வாறு செய்யவில்லை எனில் அது அறமும் அல்ல வீரமும் அல்ல என்று அறிவுறுத்துகிறார்.

கோவூர்கிழாரின் அறிவுரையைக் கேட்ட நெடுங்கிள்ளி ஆவூர்க்கோட்டையைத் திறந்துவிட்டு உறையூர் கோட்டைக்குள் புகுந்து கதவடைத்துக் கொண்டான். இதனையறிந்த நலங்கிள்ளி உறையூர் கோட்டையை முற்றுகையிட்டான். இந்நிகழ்வினை அறிந்த கோவூர்கிழார் சோழன் நலங்கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்கும் அறிவுரை வழங்கியதை,

"இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்

கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்

மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே"

இப்பாடலில் நெடுங்கிள்ளியே உன்னை எதிர்த்துப் போர் புரிபவன் பனம்பூ மாலை சூடிய சேரனும் அல்லன், வேப்பம்பூ மாலை சூடிய பாண்டியனும் அல்லன், நீ சூடியுள்ள ஆத்திப் பூமாலையையே அவனும் சூடியுள்ளான் (Avvai DuraisamiPillai, 2009). எனவே இருவரில் ஒருவர் தோற்பினும் தோற்பது உமது குலம் அல்லவா! மேலும் நீங்கள் செய்யும் இச்செயலைக் கண்டு பிற அரசர்கள் ஏளனம் செய்யக்கூடும் ஆகையால் 'போரை ஒழிமின்' என்று அறிவுரை வழங்கினார். கோவூர்கிழாரின் அறிவுரையைக் கேட்ட நெடுங்கிள்ளி உறையூர் கோட்டையையும் நலங்கிள்ளியிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறினார். இந்நிகழ்விலிருநது சோழர் குலத்தில் வேற்றுமையை அகற்றி 'ஒற்றுமைப் பண்பை' வளர்த்தவர் கோவூர்கிழார் என்பதும் புலப்படுகின்றது.

## கிள்ளிவளவனுக்கு கோவூர்கிழாரின் அறிவுரை

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்கும் கடையேழு வள்ளல்களுள் ஒருவனான திருமுடிகாரிக்கும் பெரும்பகையிருந்தது. அப்பகையின் காரணமாக மலையமானின் மக்களைக் கவர்ந்துச் சிறை வைத்தான். அவர்களை தன் பட்டத்து யானையின் காலால் மிதிக்கச் செய்து கொல்வதற்கு முடிவு செய்தான். இதனையறிந்த கோவூர்கிழார் கிள்ளிவளவனிடம் சென்று நீ புறாவின் துயர் மட்டுமன்று பிற உயிர்களின் துன்பங்களையும் போக்கிய சோழர் குடியில் வந்தவன். இவர்களோ உழுது உணவுப் பொருளைப் பயிர் செய்து பகுத்துண்ணும் வாழ்வை வாழ்பவர்கள். மேலும் இளமையுடைய இவர்கள் எதிரே வரும் யானையைக் கண்டு அழுகையை நிறுத்தி மகிழ்பவர்கள். இவர்கள் இதுவரை இல்லாத துன்பத்தை அடைந்துள்ளனர். இதுவரை நான் கூறியவற்றைச் செவிமடுத்து கேட்டாய் இனி நீ விரும்பியதை செய் என அறிவுறுத்தியதை,

"நீயே, புறவி னல்ல லன்றியும் பிறவும்

இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை

விருந்திற் புன்கணோ வுடையர்

கேட்டனை யாயினி வேட்டது செய்ம்மே”

இப்பாடல் எடுத்துரைக்கின்றது (Avvai DuraisamiPillai, 2009). மேலும் இவ்வறிவுரையைக் கேட்ட கிள்ளிவளவன், மலையமான் மக்களைக் கோவூர்கிழாரிடம் ஒப்படைத்தான். பின்பு கோவூர்கிழார் அவர்களை மலையமானிடம் ஒப்படைத்து மகிழ்ந்தார் என்ற செய்தியைக் கி.வா. ஜகந்நாதன் இயற்றிய ‘கோவூர்கிழார்’ என்ற நூல் மூலமாக அறிந்துகொள்ள முடிகின்றது (Jagannathan). இந்நிகழ்விலிருந்து கிள்ளிவளவனின் கருணை உள்ளமும், கோவூர்கிழாரின் சொல்வன்மையும், சோழர் குலத்தின் உயிர் அறப்பண்பும் வெளிப்படுவதைக் காணலாம்.

## இளந்தத்தனாரை மீட்டல்

சோழன் நலங்கிள்ளியைப் பாடிப் பரிசில் பெற்ற இளந்தத்தனார், சோழன் நெடுங்கிள்ளியைப் பாடிப் பரிசில் பெறச் சென்றார். இளந்தத்தனாரை ஒற்றன் எனக் கருதிய நெடுங்கிள்ளி சிறையிலிட்டு வருத்தினான். இதனையறிந்த கோவூர்கிழார் நெடுங்கிள்ளியிடம் அஞ்சாமல் உண்மையை உரைத்ததை,

“வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி

நெடிய வென்னாது சுரம்பல கடந்து

வடியா நாவின் வல்லாங்கு பாடிம்

நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே”

என்னும் இப்பாடலில் நெடுங்கிள்ளியே, நன்கு பழுத்திருக்கும் மரங்களைப் பறவைகள் நாடிச் செல்வதைப் போல, தங்களுக்கு நன்கு வழங்கும் ஈகை குணமிக்க வள்ளல்களை நோக்கிப் புலவர்கள் செல்வர் (Avvai DuraisamiPillai, 2009). அவர்கள் குற்றமில்லாத தெளிந்த சொற்களால் பாடிப் பரிசில் பெறுவர். அப்பரிசிலை தமது பிற்கால வாழ்க்கைக்கு சேமித்து வைத்துக் கொள்ளாது தாமும் உண்டு தனது சுற்றத்தார்க்கும் பகிர்ந்து அளிப்பர். இத்தகைய புலவர் வாழ்க்கை பிறருக்கு தீங்கு விளைவிக்கும் பண்பை அறியாதது. தங்களது அறிவுத்திறத்தால் வெற்றிக்கொண்டு வாழ்வார்கள். மேலும் நிலவுலகை ஆட்சி செய்யும் உம்மை போன்ற மன்னனுக்கு உரிய சிறப்பும் உடையவர்கள் என்றும் அறிவுறுத்துகிறார். இதனைக்கேட்ட நெடுங்கிள்ளி தன் தவறை உணர்ந்து இளந்தத்தனாரை விடுவித்தார் என்பதை எடுத்துரைத்துள்ளார். மேலும்,

மண்ணாள் செல்வ மெய்திய

நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே

என்னும் இவ்வடிகளில் புலவர் கோவூர்கிழார் அரசனிடம் எவ்வித அச்சத்திற்கும் ஆட்படாது தனது நாவன்மையால் புலவர்கள், மன்னனுக்குரிய சீரும் சிறப்பும் உடையவர்கள் என்று உரைத்ததிலிருந்து அவரின் பெருமிதப் பண்பு வெளிப்படுவதைக் காணலாம் (Avvai DuraisamiPillai, 2009).

## பாணாற்றுப்படையும் ஆற்றுப்படுத்துதலும்

ஆற்றுப்படை பாடல் வகைகளுள் ஒன்று பாணாற்றுப்படை. இத்துறையின் இலக்கணத்தை,

“சேண்ஓங்கிய வரைஅதரில்

பாணனை ஆற்றுப்படுத்தன்று”

என்னும் இக்கொளுவில் ஓங்கி உயர்ந்த மலைப்பாதையில் பரிசில் பெற்று வரும் பாணன் தன் எதிரில் வந்த பாணனைப் பரிசில் பெற ஆற்றுப்படுத்துதல் என்பது இக்கொளுவின் பொருளாகும் என்பதை ஐயனாரிதனார் எடுத்துரைத்துள்ளார் (Thirugnanasambantham, 2019). இத்துறையின்கீழ் கோவூர்கிழார் (புறம்.68, 70) ஆகிய இரண்டுப் பாடல்களைப் பாடியுள்ளார். இவ்விரண்டு பாடல்களில்

கோவூர்கிழாரின் பிறர்நலம் போற்றும் பண்பும், சோழன் நலங்கிள்ளி, கிள்ளிவளவன் மற்றும் பண்ணனின் கொடைப்பண்பும் வெளிப்படுவதை,

"மென்மையின் மகளிர்க்கு வணங்கி வன்மையின்

ஆடவர்ப் பிணிக்கும் பீடுகெழு நெடுந்தகை

புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச்

சுரந்த காவிரி மரங்கொன் மலிநீர்

மன்பதை புரக்கு நன்னாட்டுப் பொருநன்"

இப்பாடலடிகளில் இப்பாடலடிகள் வாயிலாக அறிந்துகொள்ள முடியும் (Avvai DuraisamiPillai, 2009). சோழன் நலங்கிள்ளி மென்மை குணமுடைய தாய்க்குலத்திடம் கருணையுடன் இருப்பதும், வலிமையுடன் எதிர்க்கும் பகைவர்களை அழிக்கும் சிறப்புடையவன் என்பதும், அவன் பிறக்கும் குழந்தைக்கு தாயிடம் தாய்ப்பால் சுரப்பது போல காவிரிக்கரையிலுள்ள மரத்தைச் சாய்க்கும் நீர் வளம்மிக்க நாட்டை உடையவன் என்பதையும் குறிப்பிட்டு, அவனிடம் சென்றால் மீண்டும் பிறர் வாயில் முன்சென்று கேட்காதபடி பெருஞ்செல்வத்தை வழங்குவான் என்று பாணனை ஆற்றுப்படுத்துகிறார்.

இப்பாடலில் பெண்மையின் மென்மைக் குணமும், சோழன் நலங்கிள்ளியின் கொடைப்பண்பும் வெளிப்படுவதோடு, கோவூர்கிழார் தன்னை ஒரு பாணனாகக் கருதி மற்றொரு பாணனைப் பரிசில் பெற ஆற்றுப்படுத்தியதிலிருந்து அவரின் 'பிறர் நலம் போற்றும் பண்பும்' வெளிப்படுவதைக் காணமுடிகின்றது.

மேலும், கோவூர்கிழார்,

"விறலியொடு மென்மெல வியலிச்

செல்வை யாயிற் செல்வை யாகுவை

விறகொய் மாக்கள் பொன்பெற் றன்னதோர்

தலைப்பா டன்றவ னீகை

நினைக்க வேண்டா வாழ்கவன் றாளே"

என்னும் இப்பாடலடிகளில் பாணனே விறலியோடு நீ கிள்ளிவளவனிடம் சென்றால், செல்வம் உடையவன் ஆவாய் (Avvai DuraisamiPillai, 2009). விறகு வெட்ட காட்டிற்குச் செல்பவர்களுக்கு எதிர்பாராமல் பொன்பெற்று மகிழ்வதைப் போன்றதன்று அவன் ஈகை. உறுதியாக நம்பிச் செல் உறுதியாக வழங்குவான் என்று ஆற்றுப்படுத்துவதிலிருந்து கிள்ளிவளவனின் கொடைப்பண்பும், கோவூர்கிழாரின் பிறர்நலம் போற்றும் பண்பும் வெளிப்படுவதைக் காணலாம். மேலும், இப்பாடலில், 'கைவாள் ஈகைப் பண்ணன்' என்னும் இவ்வடியில் ஈகையில் சிறந்தவன் பண்ணன் எனக் குறிப்பிடுவதிலிருந்து பண்ணனின் கொடைக் குணத்தை அறிந்து கொள்ளமுடியும் (Avvai DuraisamiPillai, 2009).

## சீறூர் மன்னனின் வீரம்

புறநானூற்றில் கோவூர்கிழார் பாடிய 308ஆவது பாடல் மூதின் முல்லைத் துறையில் அமைந்துள்ளது. இத்துறையின் இலக்கணத்தை,

"அடல்வேல் ஆடவர்க்கு அன்றியும், அவ் இல்

மடவரல் மகளிர்க்கும் மறம் மிகுந்தன்று"

என்னும் நூற்பாவில் மறக்குடியில் பிறந்த ஆண்களுக்கு மட்டுமின்றி அக்குடியில் பிறந்த பெண்களுக்கும் வீரம் உண்டு என்பதை ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பா மாலையில் விளக்கியுள்ளார் (Thirugnanasambantham, 2019). இத்துறையில் அமைந்த பாடலைக் கோவூர்கிழார் சீறூர் மன்னனின் மனைவி கூற்றாகப் பாடியுள்ளார்.

“சீறூர் மன்னன் சிறியிலை யெஃகம்

வேந்தூர் யானை யேந்துமுகத் ததுவே

புன்றலை மடப்பிடி நாணக்

குஞ்சர மெல்லாம் புறக்கொடுத்தனவே”

இப்பாடலில் சீறூர் மன்னன் வீசிய எஃகம் என்னும் வேல் பகையரசன் ஏறி வந்த யானையின் முகத்தில் பாய்ந்தது (Avvai DuraisamiPillai, 2009). அப்போது சினங்கொண்ட வேந்தன் தன் வேலை வீசினான். அவ்வேல் சீறூர் மன்னன் மார்பில் பாய்ந்தது. சீறூர் மன்னன் தன் மார்பில் பாய்ந்த அம்பினைப் பிடுங்கி வீசியபோது பகையரசனுடைய ஆண் யானைகள் எல்லாம் பெண் யானைகளைக் கண்டு நாணம் கொள்ளுமாறு புறமுதுகிட்டு ஓடின என்று குறிப்பிடுவதிலிருந்து சீறூர் மன்னனின் போராற்றலும் வீரமும் வெளிப்படுவதைக் காணலாம்.

## நலங்கிள்ளியின் ஈகை

இல்லாதவர்களுக்குக் கொடுப்பதே ஈகைப் பண்பாகும் என்னும் இவ்விலக்கணத்தை,

‘வறியார்க்குஒன்று ஈவதே ஈகை’

என்று இவ்வடியில் வள்ளுவர் எடுத்துரைத்துள்ளார் (Kaliyaperumal, 2014). இத்தன்மையில் சோழன் நலங்கிள்ளி கொடுக்கும் பரிசில்கள் பெறுபவர்களுக்கு மட்டுமின்றி அவர்களைச் சார்ந்த பலருக்கும் வழங்கி வறுமையைப் போக்குவதற்கு அமைந்ததை,

“வறனொரீஇ வழங்குவாய்ப்ப

விடுமதி”

என்னும் அடியின் வாயிலாக உணர்ந்து கொள்ளலாம் (Avvai DuraisamiPillai, 2009). இப்பாங்கானது நக்கீரர் குறிப்பிடுவது போன்று, ‘செல்வத்துப் பயனே யீதல்’ (Puram.189:7) என்னும் பண்பின்பால் படுவதாகும். மேலும் பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் தான் குமண வள்ளலிடம் பெற்ற பரிசில்களை எல்லோருக்கும் கொடுக்கும்படி தன் மனைவியிடம் அறிவுரை வழங்கியதை,

“வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்

எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே”

என்னும் அடிகள் புலப்படுத்துகின்றன (Avvai DuraisamiPillai, 2009). மேலும் வெள்ளிக்கோள் மாறுவதால் ஏற்படும் தீமையையும் அதனால் நாட்டில் வறுமை தாக்காதவாறும் தம் ஈகைக் குணத்தால் இரவலர்களைப் பாதுகாத்தவன் கிள்ளிவளவன் என்பதை,

“யாண்டு நிற்க வெள்ளியாம்

வேண்டிய துணர்ந்தோன் றாள்வா ழியவே”

என்னும் பாடலடிகளில் கோவூர்கிழார் எடுத்துரைத்துள்ளார் (Avvai DuraisamiPillai, 2009).

## முடிவுரை

சங்கப் புலவராகிய கோவூர்கிழாரிடம் சமூகநோக்கு என்ற ஆளுமைப் பண்பு மேலோங்கியிருந்ததை அவரது பாடல்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன. சோழ அரசர்களின் வீரம்,

கொடை, ஈகை, கருணை உள்ளம், உயிர் அறம், நம்பிக்கை ஆகிய ஆளுமைப் பண்புகளை எடுத்துரைப்பதோடு, சோழர் குலத்தின் சிறப்புகளை எடுத்துரைக்கும் வல்லாண்மை மிக்க புலவராகக் கோவூர்கிழார் திகழ்கிறார். பாணாற்றுப்படையில் அமைந்த பாடல்கள், பரிசில் பெற்ற பாணன், பரிசில் பெற விரும்பும் பாணனை ஆற்றுப்படுவதாக அமைவதோடு, மன்னர்களின் கொடைப் பண்பையும், கோவூர்கிழாரின் பிறர்நலம் போற்றும் பண்பையும் எடுத்துரைப்பவையாக அமைந்துள்ளன. கோவூர்கிழார் தன்னைப் பாணனாகவும், பொருநனாகவும் கருதி மற்றொரு பாணனையும், பொருநனையும் ஆற்றுப்படுத்தியதிலிருந்து, அவர் மனிதநேயம் மிக்க பண்பாளர் என்பதை இக்கட்டுரை வழி அறியலாம். இனிமையாகக் கூறும் சொல்வன்மை மிக்க பண்பாளராக கோவூர்கிழார் திகழ்ந்ததையும், அவர் கூறியதை நுட்பமாக கேட்டறியும் தன்மை மிக்கவர்களாக சோழ அரசர்கள் திகழ்ந்ததையும் இக்கட்டுரைவழிப் பெறப்படுகிறது.

## References


Avvai Duraisamipillai, Su., (2009) Puranaanooru, Part 1 & 2, Poompuhar Pathippagam, Chennai, India.

Jagannatha, K.Va., Kovurkizhar, Amutha Nilayam, Ltd., Chennai, India.

Kaliyaperumal, K., (2014) Thirukkural, New Century Book House Pvt. Ltd., Chennai, India.

Nagarajan. K., (2015) Psychology of Learners and Learning, Sriram Pathippagam, Chennai, India.

Rajiv, Mishra, K., (2004) Personality Development, Rupa Publication, India.

Sugirtha Basmath, R.S., (2017) Aalumai Valarchi, New Century Book House Pvt. Ltd., Chennai, India.

Thirugnanasambantham, S., (2019) Purapporul Venba Malai, Kathir Pathippagam, Thiruvaiyaru, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License